July 1915] தமிழ் அங்கம். [ஜூலை 1915

ஸெல்வ்கல்ச்சர்.

All these things Added

ஸர்வானுரக்ஷ ஸாரசங்க்ரஹம்.

ஆத்மாவழியைக் கண்டுபிடித்தபின் எந்த நடையோடு சாந்தி ஆலயத்தை நண்ணுமென்பதை இங்கே விஸ்தரிப்போம். சுயநயக்கட்டைக் கண்களிலிருந்து எடுத்தெறிந்தபின் நேத்திரம் நெறியை நன்றாகப்பார்க்கும். இதில் மனிதன் ஆத்ம பரிசோதனை முறையைப் பின்பற்றி, தன்னை அம்ச அம்சமாகப் பிரித்துப்பரீக்ஷிக்கத் தொடங்குவான். சுயநயமானது தன்னளவில் சக்தியும், உயிரும், ஆக்குந்திறமையுமற்றது. ஆதலால் அதுமண்போலவே அசைவற்றுக்கிடக்கும். நாம்தான் அதை எடுத்தெறியவேண்டியது. அதாகப்போகாது. எவ்விதமென்றால் அருணோதயம் உண்டாகும்போது அந்தகாரம் கொஞ்சங்கொஞ்சமாய் ஒழிந்துபோகிறதுபோல் தெய்வீக நியமமாகிற அன்பு இருதயத்தில் உதிக்கும்போது மடமையானது அகன்றுவிடும். சுயத்தில் க்ஷேமம், அமைதி இவைகளில்லாததால் நிலைவரமும், நன்மையும் பயக்கக்கூடிய நியமமொன்றைத் தேடவேண்டியதவசியமாகிறது. இன்னும் இந்த நியமம் எத்தன்மையதாகயிருக்க வேண்டுமென்றால், இதில் நாம் நமக்கு அநாவது நமது தேகம் இந்திரியம், அகங்காரம் இவைபோன்றவைகளுக்கு அடிமையாயிராமல், அந்தர்யாமியாயுள்ள பரமாத்மா திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறானென்று தெரிந்துகொள்ளவேண்டும். சுகிர்தகுணமே எஜமானத்வம் வகிக்கும் திறமைவாய்ந்தது. முதலில் மனிதன் இதில் சங்கை கொள்வான். ஆனால் சிரத்தையோடும் முழுநம்பிக்கையோடும் செல்லவேண்டும். முழுநம்பிக்கைதான் விளக்குத் திரிபோன்றது. ஏனெனில் ஆரம்பத்தில் இதுவே வழிகாட்டவேண்டும்.

இம்முழு நம்பிக்கை எந்தெந்த விஷயத்தில் வைக்கப்படவேண்டுமென்பதைக் கவனிப்போம். பரிசுத்தத்தில் அவாவும், தர்மநெறியின் இன்றியமையாமையும், நேர்மையில் தேட்டமும் அன்பினில் பசிதாகமுமாகிய இவைகளில் பூர்ணபக்தியிருக்கவேண்டும். இவைகளை நமது இலக்காகக்கொள்ளவேண்டும். இது முதற்காரியம். விடாமுயற்சியுடன் அநுஷ்டானத்திலும் கொண்டுவர வேண்டும். இந்த இடத்தில் முழுநம்பிக்கை என்ற திரியின்மேல் வைத்த கண்வாங்காமல் அதி ஜாக்கிரதைகொள்ளுதல் அவசியமானது இல்லாவிட்டால் அது தூண்டுதலில்லாமல் க்ஷீணித்துவிடும்.

மேற்கூறிய சற்குணங்கள் யாவும் சாதகமானவுடன் ஞான சூரியன் சுகுணக்கதிருடன் ஜோதிமயமாவான். பின்பு இருள்லவலேசமும் கிடையாது. எப்படியும் பிரதமத்தில் நட்புதனுடைமை ஆவசியகமானது. இதனுடைய உதவியினால்தான் திவ்ய பொருத்தம் அல்லது ஸத்வம் (Harmony), பிரபஞ்ச ஒழுங்கு (Cosmic Order), பரஸௌந்தர்யம் முதலியவைகளோடு நட்புடைமை பூண்டு உவகைகொண்டு, ஸர்வோத்தம வாழ்வின் நியமங்களிடம் சோந்தாவது சாத்தியமாகவிருக்கும்.

இப்பாதையில் ஆத்ம நிக்கிரகமும் ஆத்ம சுத்திகரிப்பும் நிகழவேண்டியது. தாராளமாகக் கைவீசிக்கொண்டு சுகமாகப்போகமுடியாது. ஏனென்றால் பாதையானது மலைமேற் போவதுபோல் மிகவும் ஒடுங்கியுள்ளது. துவக்கத்தில் அதன் வாயிலைக் கண்டுபிடிப்பது பிரயாசைதான். சுயநயக்களைகள் முழுதும் மூடிமறைத்துக்கொண்டிருக்கும். அதவா

கண்டுபிடித்தாலும் சோம்பல், மந்தபுத்தி, மோஹம் முதலியவைகளிருந்தால் முற்றிலும் நழுவவிடவேண்டிவரும். ஆதலால் தினேதினே மனனம் பண்ணிவந்தும் அதைப்பற்றி எப்பொழுதும் தியானஞ் செய்யவேண்டுவது யாத்திரிகளின் கடனாகும்.

பரபரிபூரண நிலையைத் தன் குறியாகக்கொண்டு அதினுடைய ஒளியில் தன்னைப்பரீக்ஷிக்கிறவன் தியானயோகத்திலிருக்கும்போது ஆத்மப் பிரயாணமார்க்கத்தில் மூன்றுவகையான வாயில்களைக் கடந்து செல்லவேண்டியது அவசியம். இவையெல்லாம் ஸந்யாஸவாயில்களே (Gates of Renunciation) அதாவது ஒவ்வொன்றிலும் நுழையும்பொழுது மனிதன் சிலபொருள்களைத் தியானஞ்செய்து கொண்டே முன்னடக்கவேண்டியது. அவையாவன, முதலாவது காம்ய ஸந்யாஸவாயில் அல்லது ஆசை நீக்கவாயில், இரண்டாவது அபிப்பிராய ஸந்யாஸவாயில், மூன்றாவது ஆத்ம ஸந்யாஸவாயில். துறவு சம்பந்தமானவையே இவையெல்லாம்.

முதலில் தியானயோகத்திலமர்ந்து ஆசாபாசத்தையெல்லாம் ஆராய்ந்து காமங்களிலிருக்கும் வரையில் மனிதன் தேகாதிகளுக்கும் புறநிலைமைகளுக்கும் தாஸ்யத்வம் பூண்டிருக்கிறனென்று அறிவது நமது கடமை. உடனே முதல்வாசல் தாண்டவேண்டும். இங்கேபோகையில் பரிசுத்தத்திற்காக ஆத்ம சிக்ஷைமுறை நடைபெறும். மனங்கிளம்பி நின்ற வேளையெல்லாம் இதுவரையில் உண்டு, உறங்கி, பெண்டிராற் சுகங்களுந்தான். இப்பொழுதோ தன் கெட்டகுணங்களை யெல்லாம் அடக்கி வச்யமாக்கி ஆண்டுவருவான். மனச்சார்பு மேற்கொள்ளாது. ஒழுங்கும், முறையும் அநுசரிக்கப்படும். சுசீலம் உண்டாகும். இதற்காகச் சிலதுர்வழக்கங்களை விட்டுவிடவேண்டிவரும். போஜனத்தைத் திருஷ்டித்த காலமெல்லாம் அருந்தமனங்கொள்ளான். குறிப்பிட்ட காலவரை முறையால் நடத்தப்படுவான். ஆகாரம் மிதத்திற்கு அதிகப்படமாட்டாது. சோம்பேறிப் பிசாசு பிடித்து வெகு நேரம் தூங்கமாட்டான். வைகறையில் படுக்கையில் மனோபாவனை வீணாகச்செய்துகொண்டிருக்கமாட்டான். நித்திரை அளவாகவேயிருக்கும். மதுபானம், மாம்ஸ பக்ஷணம், ஜீவஹிம்ஸை, கொடுமை முதலான துர்க்குணங்கள் ஏற்படா. இயற்கையிலே சுத்தமாயுள்ள ஊணையே உட்கொள்வான்.

காமங்களைத் தண்டித்துவேண்டிய சீர்திருத்தம் செய்து வரும் ஏற்பாடு அதிகரிக்கும். இதில் சித்தவிருத்தி பெருகப்பெருக இவ்விதம் செய்தல் மாத்திரம்போதாது, ஆசை அடியோடு நீங்கி விடவேண்டுமென்று புலப்படும். இங்கேதான் ஆன்மாவானது விதிக்கப்படாதனவைகளைப் புரியதூண்டுதல் அல்லது சோதனை யென்னும் பள்ளத் தாக்கின் ஊடேபோகவேண்டும். ஆசைகளாகிய கொடிய விலங்கினத்தின் பயங்கரமான குகைத் துவாரங்கள் இங்கே காணப்படும் இத்துஷ்ட மிருகங்கள் தங்கள் அதிகாரத்தையும் கம்பிரத்தையும் செலுத்த மீண்டும். மீண்டும் எத்தனம் பண்ணுமல் மாண்டுபோகிறதில்லை. முழுநம்பிக்கை விளக்குத்திரியைப்பற்றி கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். இல்லையானால் சோதனையால் நேரிடும் சந்தேகப் புயற்காற்று படக்கென அவித்துவிடும் ஆசாபாசமிருகங்கள் யாத்திரகனை ஸாமதான பேத தண்டமாகிற சதுர்வித உபாயத்தால் அபஜெயப்படுத்த வழிதேடும். இங்கே நிரம்ப நம்பிக்கையும் தைர்யமும் அவனுக்கு ஸஹாக்கள், வலையிற் சிக்கிக்கொள்ளுமாறு ஏமாந்துபோகக்கூடாது. அற்ப சுகத்தால் மோசம், நாசம் இவற்றிற்கு உடன்பாடாயிருக்கப்படாது. சிறங்கிற்குச் சொறிகொடுத்து அப்புறம் வாதையை விருத்திபோலாக ஆசைக்கு இடங்கொடுத்தல் இருக்கும். அணுவளவேனும் இரக்கம் பாராட்டாமல் தன்னந்தனியே அவைகளைவிட்டு விலகிப்போக வேண்டும். பூர்த்திசெய்யாமையால் ஆகாரமின்றி மரித்துவிடும்.

பிறகு ஆத்ம நிக்கிரகம், தீரம், எவர்க்கும் பயப்படாமல் நலத்தையே கடைப்பிடித்தல் இவை போன்ற நற்குணங்களைப் பயிற்சிசெய்தலே இனிமேல் நடக்கவேண்டியதற்குச் சாதனங்கள். இந்தவிடத்தில்தான் நிந்தைக்கும் குற்றத்திற்கும் ஆளாகவேண்டுமாறு நேர்ந்துவிடும். பிராணசிநேகிதருங் கூட இவன் திடமில்லாமல் பெரிய கடிகாரத்தில் தொங்கி அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருக்கும் கருவிபோல் உறுதியின்மையுள்ளவனென்று பழித்துத் தங்களாலானமட்டும் பழயவழிக்குக் கொண்டுவர முயலுவார்கள். எங்களுக்குத்தெரியாததா உனக்குத் தென்பட்டது, நீ இதனால் நஷ்டமும் லோகாபவாதமுந்தான் அடையவேண்டும். என்று வாதாடி வருவார்கள். முதலில் அதாவது தர்க்கத்திற்குள்ளானலும் பிறகாவது ஆராய்ந்து தற்போதம்

ஆட்கொண்டு அதாவது தம்முடைய க்ஷேமலாபசிந்தனையில் பிறர் நலம் மறந்து இவ்விதம் வாதாண்டராயிருக்கிறார்களென்று உணாவதே மெய்ப்பொருளாராய்ச்சி பண்ணுவோன துகடனாகும். இதனால் உத்கிர்ஷ்டமான பிரஹ்ம போதம் அல்லது பிரஹ்மஞான சொரூபம் எய்த இச்சைமேலிடும். ஆசைக் கூச்சலுக்கும் அன்பர் வெறுப்புக்கும், அகில நிந்தனைக்கும் செவி சாய்த்து நிற்காமல் திடச்சித்தம் பெற்று யாத்திரைபோவான். இதன் பலனை நாடோறும் அவனது நெஞ்சத்தில் கரந்து நிற்கும் சுயநயத்திவலைகள் ஒவ்வொன்றாக ஒழிந்துபோய்விடும். அந்தர்முகத் தர்சனம் அல்லது உட்பார்வையால் எல்லாவற்றின் இயல்புகளை யறிந்து பிரதிகூலமான காரியங்களினால் மனந்தளராமல் மீண்டும் நம்பிக்கை, தைரியம், ஜெயத்தியானம் இவைகளால் உற்சாகப்படுத்தப்பட்டு முன்னோக்கியே செல்வான்.

(இன்னும் வரும்)

—:*:—

Light of Wisdom.

விவேக சந்திரிகா.

கோடானுகோடி ஜனங்கள் வணங்கும் கோயிலுள்ள கடவுளை நீயும் வணங்கு. அத்தனைபேர்கள் வணங்க வந்திருப்பதால் பரம கருணையையுடைய பகவான் அங்கு சமுகராய் விளங்குவரென்பது நிச்சயம்.

விவேகமும் வைராக்கியமுமில்லாதவன் எத்தனை சாஸ்திரங்கள் படித்தாலும் பயனடையான். வெண்காயத்தை உரிக்க உரிக்கத் தோலாகவிருக்குமேயன்றி, உள்ளே யாதொரு பதார்த்தமுமிராது. அதுபோல் நான் யார்? என்பதை யோசித்துப்பார்த்தால் நான் என்னும் வியவகாரமேயில்லையென்றேற்படும். நான் எனபது என் கையா? காலா? மூக்கா? கண்ணா? கையுமில்லை; காதுமில்லை; மூக்குமில்லை; கண்ணுமில்லை. நான் என்பது ஒன்றுமில்லையாயின் பின்னுள்ளது நானென்ன? அதுதான் பிரம்மம்.

நெல்லைப் பொரிப்பதற்காகச் சட்டியிற்போட்டு வறுக்குங்கால் சில உடனே வறுபட்டுத் தெரித்துச் சட்டியினின்றும் விடுபட்டு வெளியே விழுகின்றன. அவைகள் கொஞ்சமேனும் தீயாமல் சுத்தவெண்மையாயிருச்கின்றன. மற்றப் பொரிகளெல்லாம் எவ்வளவு சுகமாய் வறுபட்டாலும் ஏதேனுமோரிடத்திலாவது கிஞ்சிற்றுத் தீய்ந்து கருநிறமாயிருக்கும். அதுபோல் உலகவியவகாரங்களிற் கொஞ்சமேனும் முழலாமல் உடனே துறவிகளான சங்கராசாரியார், சுகர்முதலிய மகான்கள் மகாசுத்தர்கள். கொஞ்சமாவது உலகவின்பத்தை அனுபவித்த பெரியோர்கள் முற்றிலும் சுத்தர்களாயிருப்பதரிது.

யானையைக் கட்டுத்தறியினின்றும் அவித்து விட்டால் மரங்களையும் கிளைகளையும் முறித்துவிடும். பாகன்மாவெட்டியால் அதன் மண்டையில் ஒரு குத்துக் குத்தினால் துஷ்டத்தனத்தை யொழித்து ஸாதுவாகும், அதுபோல் மனதை அடக்காமல் விட்டுவிட்டால் அது அயோக்கியமான விஷயங்களில் பிரவர்த்திக்கும் அதை விவேகமென்னும் வாளால் வெட்டித்தடுத்தால் துர்விஷயத்தில் பிரவேசியாது. நம்முடைய தேகத்தில் நமக்குள்ள அபிமானத்தை நாம் எப்படி தொலைக்கலாம்? தேகமானது எலும்புமாமிசம் இரத்தம் முதலியவற்றாலாகிருக்கிறது. இவைகளில் ஒவவொன்றையும் அலாதியாக எண்ணிப்பார்த்தால் வெகு அசங்கியமாகத்தோன்றும். அன்றியும் ஒவ்வொன்றும் நாள்ப்பட்டிருந்தால் நாற்றமெடுத்து அழுகிப்போய்விடும். இப்படி எண்ணியெண்ணி அதன்மேலுள்ள பிரியத்தை அகற்றவேண்டும். பால் தண்ணீருடன் கலக்கும். அது வெண்ணையாக மாறினால் தண்ணீரில் மிதக்குமேயன்றி கலக்காது, அதுபோல் நாம் அவிவேகிகளாயிருக்கும்வரை உலகத்திற்கலந்துழல்வோம். விவேகமுண்டானால் உலகத்தில் வசித்தாலும் அத்துடன் ஒட்டாமலும் அதனால் விளையும் துன்பத்தை அனுபவியாமலிருப்போம். பிராமணனைய் ஜெனித்தவன் பஞ்சமனுடைய வீட்டில் வஸிப்பதுபோலும் பிரபுவாயிருப்பவன் நாற்றம்பிடித்த சகதி நிறைந்த குடிசையில் வாழ்வதுபோலும் மனிதனுடைய மனசு துர்மார்க்கத்திற் பிரவேசிக்கிறது.

கல்லில் ஆணியை அடித்தால் அது உள்ளே செல்லாது. மரத்திலடித்தால் செல்லும். பூமியில் தாராளமாகப்போகும். அதமர்களுடைய ஹிருதயத்தில் நல்லோர்களின் போதனை யேறுகிறதில்லை. மத்திமர்களுடைய மனதில் சிறிது நேரம் கழித்து ஏறுகிறது. உத்தமர்களின் மனதில் உடனே படுகிறது.

முன்னொரு சமயம் ஸாதுவான ஓர் பரமஹம்ஸரை நோக்கி ஒருவன் 'சுவாமி! தாங்கள் ஏன் பெண்சாதியுடனிருந்து இல்லறம் நடத்தவில்லை

என்றான். அதற்கு அவர் அடியில் வருமாறு நியாயம் கூறுகிறார். முதற்காலத்தில் கார்த்திகைதேவன் தன் நகத்தால் ஓர் பூனையின் கன்னத்திற் கிள்ளினான். பிறகு வீட்டுக்குவந்து தன் தாயின் முகத்தை நோக்க அதில் கிள்ளுக்காயமிருந்தது. உடனே ஆச்சரியப்பட்டு ‘அம்மா! உன் கன்னத்தில் கிள்ளுக்காயம் உண்டானதற்குக் காரணம் என்ன?, என்றான். அதற்குத் தாய் ‘அடே! நீ இன்று காலமே ஓர் பூனையின் கன்னத்திற் கிள்ளவில்லையா’? வென்றாள். அதற்கவன் ‘ஆம். நான் பூனையின் கன்னத்தில் கிள்ளினதுண்டு; உன் கன்னத்தில் காயமுண்டாவானேன்’ என் அம்மன் ‘அடே குழந்தாய்! இவ்வுலகமெல்லாம் என் ஸ்வரூபமாயிருக்கிறது. ஆதலின் நீ பூனையின் கன்னத்தைக் கிள்ளியதால் என் கன்னத்திற் காயமுண்டாயிற்று’ என்றாள். ஆதலின் உலகத்திலுள்ள சகல மாதர்களும் பரமேசுவரியின் ரூபமாயிருப்பதால் என் பெண்சாதியையும் அவ்வாறாக நினைத்து நான் அவளுடன் சேராமல் சன்னியாவியாய்விட்டேன்’ என்றார். இம்மாதிரி உலகிலுள்ள புருஷர்களெல்லாம் சகல ஸ்திரீகளையும் ஜகதம்பிகையாகப் பாவிப்பதும் ஸ்திரீகளெல்லாம் புருஷர்களை ஜகதீசுவரனாகப் பாவிப்பதும் நன்று.

சமுத்திரத்திற்கும் அலைக்குமுள்ள சம்பந்தத்தைப்போல, ராமகிருஷ்ணமூர்த்திகட்கும் பரப்பிரமத்துக்கும் சம்பந்தமுண்டு. அதாவது சமுத்திரத்தினின்றும் உண்மையாகவே அலைவேறல்லாதது போல் பரப்பிரம்மத்துக்கும் ராமகிருஷ்ணமூர்த்திகளுக்கும் வித்யாஸமில்லை. ஊகமில்லாதவர்கள் கடல்வேறு, அலைவேறு என்று நினைப்பதுபோல் ஞானமில்லாதவர்கள் ராமகிருஷ்ணமூர்த்திகள் வேறென்றும், பரப்பிரம்மம்வேறென்றும் நினைப்பார்கள். ஆதலின் உண்மையாகவே ஸ்ரீராமனும் கிருஷ்ணனும் பரப்பிரம்ம சொரூபமேயன்றி வேறல்ல.

மாம்பழத்தை சுவாமிக்கு நிவேதனம் செய்யலாம். அல்லது பெரியோர்களுக்கு வினியோகம் செய்யலாம். அதில் காக்கை மூக்கால் கொத்தி ஓர் பக்கத்தில் குளறிவிட்டால் உபயோகமின்றிப்போய் விடுகிறது. அத்தகைய அசுத்தமான பழத்தை ஈசுவரனுக்கு நிவேதனம் செய்யவாவது பெரியோர்களுக்கு வழங்கவாவது முடியாமல் எறிந்துவிடுகிறோம். அதுபோல் பிள்ளைகளையும் பெண்களையும் உலகவியவகாரம் தெரியாத சிறு பிராயத்திலேயே கடவுள் பணிக்காகவிடவேண்டும். உலகாசை ஓர் தரம் அவர்களுடைய ஹிருதயத்திற் புகுந்துவிட்டால் பிறகு அவர்கள் கடவுள் பணிக்கு உரியராகார்.

நாம் அநேகமுறை நாடகம் பார்த்திருக்கிறோம். அவைகளில் கிருஷ்ணவேஷக்காரன் வருவதற்காக முன்னாடியே அனேக பாட்டுகள் பாடுவதுண்டு. அப்போதெல்லாம் அவ்வேஷம் பூண்ட பேர்வழி சிறிதேனும் கவனியாமல் தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். பிறகு நாரதவேஷக்காரன் அரங்கத்தில் வந்து கையிற்பிடித்த வீணையை“நாராயண” “நாராயண” வென்றும், “நந்தாவரகுமாரா, நவனீதாதகிசோரா, நாராயண, நாராயண” வென்று மீட்டி மன உருக்காமாய்ப்பாடியவுடனே கிருஷ்ணவேஷக்காரன் சீக்கிரமாய் வந்துவிடுகிறான். அதுபோல் மனதில் பக்தியின்றி நாலுபேர் ‘மெச்சுவதற்காக “நாராயணா! மகாதேவா! ஹரே! ராமா!” வென்று கூச்சலிடும் போடுவர்களுக்கு பகவான் பிரத்தியக்ஷமாகார். உள்ளன்புடன் ஹிருதயத்தில் பகவானையிருத்தி ஸ்தோத்திரிக்கும் பரமபக்தனுக்கு அவர் அதிசீக்கிரமாய் பிரத்தியக்ஷமாகிறார்!

நாம் சாலைவழியாகச் செல்லும்போது மரங்களில் அநேக குரங்குகளிருப்பதைக் காண்கிறோம். அதில் சிலகுரங்குகளின் அடிவயிற்றில் அவைகளின் குட்டிகள் தெங்கிக்கொண்டிருக்கின்றன. இந்தக் குட்டிகள் தாயின் அடிவயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பதுபோல் நாம் பகவானுடைய பாதாரவிந்தங்களை மனதால் கெட்டியாகப் பிடித்துகொள்வது நன்று. அவ்வாறு செய்தால் நாம் மோக்ஷமடையக் கூடும்.

பண்டிட், T. K. ராமபத்ரசர்மா.

வருங்கால லக்ஷியங்கள்.

மதம்.

மனிதன் பரமாத்மாவை அறியவும் அடையவும் மார்க்கத்தைத் தேடுவதும், தனக்குள் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவை அறியவும் அடையவும் நெடுங்காலம் பிரயத்தனப்பட்டு, ஆத்மபோதம்பெற்று ஸ்வாநுபவத்தால் ஸாக்ஷாத்கரித்த மஹாநுபாவர்கள் மூலமாய் அந்த மார்க்கம் இன்னதென்று வெளியிடப்படுவதுமே மதம் எனப்படும். ஏதாவது ஒரு ஜனங்களுக்குள் நூதனமாக ஒரு மதம் ஸ்தாபிக்கப்படுகிறபோது அந்த ஜனங்கள், விகாஸமுறையில் மிகவும் தாழ்ந்தபடியில் இருப்பார்களாகையால், மதஸ்தாபநாசாரியர்கள் இன்னதைச் செய்யுங்கள் இன்னதைச் செய்யாதீர்கள் என்று விதிநிஷேதங்களை மட்டிலும், அவர்களுக்கு நியமனம் செய்வார்களேயன்றி ஏனப்படிச் செய்யவேண்டும், அல்லது ஏனப்படிச் செய்யக்கூடாது என்பதற்குக் காரணங்களை அவர்களுக்குத் தெரிவிக்கிறதில்லை. தத்வங்களை மட்டிலும் அவர்களுக்குச் சொல்வார்களேயல்லாமல் அவைகளை நிரூபணம்செய்து காட்டுவதில்லை. எப்படி ஒரு பௌதிக சாஸ்திரியானவர் (Scientist) தான் பரிசீலனம் செய்து தெரிந்துகொண்ட ஸித்தாந்தங்களைத் தன்னுடைய மாணாக்கர்களுக்குச் சொன்னால் அவர்கள் அவைகளை உண்மை என நம்பிப் பிரவிர்த்திக்கிறார்களோ, அப்படியே அந்த ஜனங்களும் சிரத்தையுடன் உட்கொண்டு நம்பி அநுஷ்டிக்க வேண்டியதற்காக மதஸ்தாபநாசாரியர்களால், சில கோட்பாடுகள் நியமனம் செய்யப்படுகின்றன.

சாஸ்திர வித்தியாப்பியாஸ முறையில் எப்படியோ அப்படியே, மநஸ்தாபந முறையிலும் ஆரம்பத்தில் சில கோட்பாடுகளை சிஷ்யர்கள் நம்பிக் கட்டாயமாய் அங்கீகரிக்கும்படி செய்தால் மட்டிலும் அவர்கள் வேகமாய் அபிவிருத்தியடைவது சாத்தியமாகும். ஏனென்றால் உபதேசம் செய்பவர்கள் பிரயாசைப்பட்டு ஸ்வாநுபவத்தால் சேகரித்த ஞானத்தின் பிரயோஜனத்தை சிஷ்யர்கள் சிரமமில்லாமல் அடைந்துவிடுகிறார்கள். ஆகையால்தான், உபதேசிக்கப்படும் தத்வங்களின் உண்மை சிஷ்யர்களின் மனதிற்குப் புலப்பட்டாலும் புலப்படாவிட்டாலும், ஆரம்பத்தில் சிஷ்யர்கள் அவைகளைக் கட்டாயமாய் ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்படுகிறார்கள்.

ஆனால் சாஸ்திர வித்யாப்யாஸத்தில் தனக்குத் தானே பரிசீலனம் செய்து தெரிந்துகொள்ள மாணாக்கர்களுக்குச் சக்தியும் சாமர்த்தியமும் ஏற்பட்டவுடன், முந்தி விசாரிக்காமல், தான் ஒப்புக்கொண்ட தத்வங்களின் உண்மையைப் பரிசீலனம் செய்ய ஆரம்பிக்கிறான். அதை உபாத்தியாயர் தன்னிடத்தில் விசுவாசக்குறைவாகக் கொள்ளுவதில்லை. தன்னுடைய மாணாக்கன் ஸ்வயமாகத் தெரிந்துகொள்ள யோக்யதையில்லாமல் எந்நாளும் பிறர் சொல்வதையே குருட்டுத்தனமாய் நம்பிக்கொண்டிருக்கவேண்டுமென்று விரும்புகிறதில்லை. மதவிஷயத்திலேயோ அப்படியில்லை. சிஷ்யனுக்கு விவரந்தெரிந்து தன்னுடைய மதத்தில் உபதேசிக்கப்படும் தத்வங்களின் உண்மையைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தானேயானால், அவன் மதத்துரோகியென்று எண்ணப்படுகிறான். குழந்தைப் பருவத்தில் எப்படியோ, அப்படியே வயதிலும் அறிவிலும் முதிர்ந்த பின்னும், தத்வங்களின் உண்மையைப்பற்றித் தனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும், அவைகளை சத்தியமென்றே ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறான். ஆகையால் அவன் அந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்படச் சம்மதிக்காமல், மீறித் தன்னுடைய மனச்சாக்ஷி சொல்லுகிறபடி அபிப்பிராயங்கொள்ள ஸ்வாதந்திரியம் பாராட்டுகிறான்.

அறிவிலும் தர்மாதர்ம விவேகத்திலும், மனிதன் இளமைப் பருவத்திலிருக்கும்போதுதான், மதங்களில் கொள்கைகள் நிர்ப்பந்தமாய் நியமனம் செய்யப்படுகின்றன. அந்த காலத்தில் தகப்பனுடைய மதத்தையே பிள்ளை ஏற்றுக்கொள்கிறான். அப்படியே பரம்பரையாய் வருகிறது. எப்படி ஒரு தேசத்தில் அல்லது ஒரு வகுப்பாரில் பிறந்தவர்களுக்குத் தலைமயிரின் நிறம் கண்ணின் நிறம் முதலானவை, ஒரே மாதிரியாய் ஏற்படுகிறதோ, அப்படியே மதமும் பிறப்பின்படியே ஏற்பட்டுவிடுகிறது. பல மதங்களை ஆராய்ந்து தனக்குத் திருப்தியைக் கொடுக்கும் மதத்தை அவனவன் தேர்ந்தெடுப்பதென்கிற தில்லாமல், வழக்கத்தை ஒட்டியாவது, பரம்பரையை ஒட்டியாவது, சம்பிரதாயத்தை யொட்டியாவது மதம் ஏற்பட்டுவிடுகிறது.

மனிதன் மேன்மேலும் விகாசத்தை யடைந்தவுடன், தன்னுடைய மதத்தில் உபதேசிக்கப்பட்ட தத்வங்களின் உண்மையைப்பற்றி விசாரிக்கத்

தொடங்குகிறான். தன்னுடைய முன்னோர்கள் அவைகளை உண்மையாகக்கொண்டிருந்தால் தானும் அவைகளை உண்மையாகக்கொள்ளவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கிறான். குருட்டுத்தனமாய் நம்புவதைவிட்டு, தன்னுடைய புத்தியைக்கொண்டு ஆராய்ச்சி செய்யப்புகுகிறான். இதுவரையில், தான் உண்மையென்று நம்பியிருந்த தத்வங்களைப் பரிசிலனம் செய்து தன்னுடைய புத்திக்கும் மனச்சாக்ஷிக்கும் விரோதமின்றி இருப்பவைகளை மட்டிலும், ஏற்றுக்கொள்ளவேண்டியது தன்னுடைய கடமையென்று தீர்மானிக்கிறான்.

இந்த ஸம்சய நிலையானது (Sceptical Stage) மனிதனுடைய மதஸம்பந்தமான ஏற்றத்தில் ஒரு படிபோலாகும். ஸஹஜமாய் ஒவ்வொருவரும் அந்தப்படியை யடைந்துதான் மேலே போகவேண்டியது. பூர்வாநுபவங்களின் பயனானது இப்பால் வாஸனையாக அமைந்திருக்கும் நிலைமையில் அதற்கு மனச்சாக்ஷி என்று பெயர். எப்படித் தற்காப்பு (Self Preservation) என்னும் ஸ்வபாவ குணமானது ஸ்தூல சரீரத்திற்கு அபாயம் நேரிடாமல் தடுக்கிறதோ, அதுபோல மனசாக்ஷி என்பது அநியாய வழியில் மனிதன் பிரவிர்த்திக்காமல் தடுக்கிறது. ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ததில் முந்திய அநுபவம் சுகமானதாயிருந்தால் அதே மாதிரி ஸந்தர்ப்பம் திரும்பவும் நேரும்போது, அதைச் செய்யவேண்டுமென்றும், முந்திய அனுபவம் துக்கமானதாயிருந்தால் அதைச் செய்யவேண்டாமென்றும் மனச்சாக்ஷி சொல்லுகிறது. முந்திய அநுபவத்தில் வராத சந்தர்ப்பம் நேர்ந்தால் நம்முடைய மனச்சாக்ஷி ஒன்றும் சொல்லுகிறதில்லை.

இந்த ஸம்சய நிலையிலிருந்து மனிதன் இரண்டு வழியாக வெளியேறலாம். (1) தனக்கு ஏற்பட்ட ஸம்சயங்களை நிவிர்த்திசெய்து கொள்ளச் சக்தியற்றவனாய், பிரமித்துப்போய் பழையபடி நம்பிக்கை நிலை (Dogmatic Stage) யையேயடைந்து விடுகிறான். (2) ஸ்தூல திருஷ்டிக்கு மேல்பட்டதாயுள்ள ஸூக்ஷ்ம திருஷ்டியைப் பயிற்சி செய்து தனக்கு உபதேசிக்கப்பட்ட தத்துவங்களின் உண்மையை ஸ்வயமாகவே பரிசீலனம் செய்து ஸம்சயம் தெளிந்து அவைகளில் ஸத்தியமாகவும் நித்தியமாகவும் உள்ளவைகளை மட்டிலும் ஏற்றுக் கொள்கிறான். இவ்விதமாக மேன்மேலும் விகாஸத்தை யடைந்து ஸூக்ஷ்ம லோக விஷயங்களை ஸ்வாநுபவத்தால் நேரிலறிந்து ஞானியாகிறான். பௌதிக சாஸ்திரத்தின் உண்மையை ஸ்வயமாகப் பரிசீலனம் செய்தவர்கள் எவ்வளவு நிச்சயமான ஞானத்தைப் பெறுகிறார்களோ அவ்வளவு நிச்சயமான ஞானத்தை ஸ்வாநுபவமடைந்த ஞானிகளும் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட அநேக ஸூக்ஷ்ம தரிசிகளுடைய பிரத்தியக்ஷாநுபவங்களின் ஒற்றுமையால் தத்வங்களில் நிச்சய புத்தி யதிகரிக்கிறது.

இதுதான் சமீபத்தில் வரும் காலத்தில் மத விஷயமான லக்ஷியமாகும் என்று நம்புகிறேன். பரம்பரையாக வரும் நம்பிக்கைகள் போய் ஸ்வாநுபவத்தால் உண்டாகும் ஞானம் நிலைபெறும். ஆசாரியர்கள், கிரந்தங்கள், முதலான பாஹ்யப் பிரமாணங்களைக் காட்டிலும் தன்னுடைய உள்ளத்தின் கொள்கைக்கே மதிப்பு ஏற்படும். புதை மணல் போன்ற கேவல நம்பிக்கை போய், பாறைபோன்ற ஸ்வாநுபவம் அடிப்படையாக அமையும். ஸ்தூல லோகத்தில் பௌதிகசாஸ்திர ஞானம் மேன்மேலும் அபிவிருத்தியடைய வேண்டுமானால், எப்படிச் சலிக்காத பொறுமையும், இடைவிடாத முயற்சியும், உறுதியான பிடிவாதமும், அபஜயத்தால் மனந்தளராமையும் அவசியமோ அப்படியே, ஆத்ம ஞானம் விருத்தியடையவேண்டுமானாலும் அவைகள் அவசியமே. எதை யறிந்தால் மற்றதெல்லாம் அறிந்ததாக ஆய்விடுமோ அப்படிப்பட்ட நித்தியமான பரம்பொருளை அறியவேண்டுமானால் எத்தனை பாடுபடவேண்டியதானாலும் பெரிதல்ல.

ஸம்சய நிலையிலுள்ள சிலர்கள், திரும்பவும் நம்பிக்கை நிலைக்குப் போகவேண்டிய அவ்வளவு பலக்குறைவு இல்லாமலும், ஸ்வாநுபவ நிலையை யடைய வேண்டிய, அவ்வளவு பலமில்லாமலும், ஸம்சய நிலையிலேயே யிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், தேவர்கள், ஈசுவரன், ஸ்வர்க்கம், நரகம், முதலானவைகளில் ஆஸ்திக புத்தியில்லாவிட்டாலும் நல் வாழ்க்கைக்கு நல்லொழுக்கம் மிகவும் அவசியம் என்ற நம்பிக்கையுடன் நன்னெறி வழுவாது நடப்பவர்களாயிருப்பார்கள். அவர்கள் சார்ல்ஸ் பிராட்லா (Charles Bradlaugh) வில்லியம் கிங்டன் கிளிப்போர்ட் (William Kingdon Clifford) முதலானவர்களைப்போல ஜீவனுடைய நித்தியத்வத்தில் நம்பிக்கையற்றவர்களா யிருந்தாலும் பரோப

காரத்தைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் வேறில்லை என்று நன்குணர்ந்தவர்களாயிருப்பார்கள். அப்படிப்பட்ட சிலாக்கியமான ஸம்சய வாதிகளை சிறந்த ஸ்வானுபவிகளுக்கு, அடுத்தபடியாகச் சொல்லலாம். அவர்கள் இந்த ஜன்மத்தில், வருங்கால மதமாகிய கோவிலுக்குள் பிரவேசிக்காமல் வெளியேயிருந்தாலும் வாசற்படிக்கு சமீபத்தில் இருப்பார்கள். அடுத்த பிறப்பில் வாசற்படியைத் தாண்டி உள் சென்று பரமனைத் தெரிந்து கொள்வார்கள்.

(பூர்ணச்சந்திரோதயம்.)

—*—

ஆங்கில இலக்கியத்திரட்டு—ரஸ்கின்.

ஸ்ரீமாந் P. R. கல்யாணசுந்தரமுதலியாரவர்கள்.

நான் சொல்வதை நம்பி, அதன்படி ஒழுகும் அத்துணை நம்பிக்கை என்னிடம் வைத்த சிறுமி (சிறுவர்) களுக்கு நான் சொல்வது இதுவே:—

நீ எத்துணை விசேஷ அறிவும் சிலாக்கியமும் நற்குணமும் அமையப்பெற்றிருப்பினும், உலகிலுள்ள சிறுமிகள் பலரினின்றும், தன்னுண்மைச் சுபாவத்தை யறிவுறுத்தக் கடவுள் உன்னையே தேர்ந்தெடுத்துள்ளாரென்று கனவிலும் கருதாதே.

குறைவற நிரம்புறு புரையில் நல்வேதம்போதிக்கப்படுகின்றதும், கற்பிக்கப்படுவதெல்லாம் உண்மையாகவே யிருப்பதுவும், செய்ய விதிக்கப்படுவை சிறந்தவையாகவே யிருப்பதுவும், எந்த இடத்திலோ அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் உன்னைக் கடவுள் படைத்திருக்கிறாரென்றெண்ணாதே.

சமயிகள் கொள்கையின் குற்றங்களைந்து, பக்தியியல் புணர்ச்சி வாய்ந்த நல்லிடத்தில், நல்வேளையில், ஜனிக்கும்படியான தெய்வ கருணையும், விதிதனையும் பொருந்தியிருக்கப் பெற்றோமென்றெண்ணுவதே உனதற்பமானதிற்றோன்றும் அபிப்பிராயங்களில் அதிக மௌட்டீகமானது.

ஆடையற்று அநாகரீகமாய்க் காட்டோடித்திரியும் எளிய பேதையைவிட, உனது சிற்றுடை மதுர நேர்க்கு, நல்லெண்ணம், பேரவர்களுக்காகக் கிஞ்சிற்றும் அதிகமாக உன்னை யாவற்றையும் படைத்தாளும் பரமன் நேசிக்கவில்லை. இது விஷயம் உனக்கு அதிர்ப்தியாயிருப்பினும், இவ்வுண்மை மறுகற்பாலன்று. மேலும் நீ கடவுளை யறிந்திருப்பதைப் பார்க்கிலும், அக்காட்டோடி அதிகமாயே அறிந்திருக்கக் கூடும்.

ஆனால் ஒரு வித்தியாசம் உண்டு. கடவுளைப் பற்றிய நினைவு அக்காட்டோடிக்குச் சிறிதேனும் அம்மட்டிற்குற்ற மற்றதாம்; நீ மிக்க சிந்தனையுடையவளாயினும், அவை பெரும்பாலும் தவறானவையே. எவ்விஷயத்திலும் அதி நுட்பமான இவ்விஷயத்தில் அறத்தெளிந்த அறிவு உனக்கு ஏற்படுவதரிது. ஆகையால் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசாதடங்கியிருப்பதே உனக்கழகாம், ஒழுங்குமாம்.

நீ உறுதியாய் உணரவேண்டிய இரண்டாவது விஷயம்:— நீ எவ்வளவு நல்லவளாயினும், உன்னிடத்திற் குற்றங்களிருக்கும். நீ எவ்வளவு முட்டாளாயினும் அவற்றிற் சிலவற்றையேனும் தெரிந்துகொள்ளக்கூடும். அக்குற்றங்கள் எவ்வளவு அற்பமாயினுமவற்றை நீக்குவதற்கு மிகக்கடினமுயற்சி யெடுக்காவிட்டாலும், மனந்தளராது முயற்சி சிறிதேனும் செய்க.

நீ என்னிடம் ஏதாவது நம்பிக்கை வைத்திருப்பாயானால் உன்னிடத்தில் அநேக குற்றங்கள் இருப்பனவாக உனக்குத் தோன்றினும், அவற்றுள் அதிகக்கேடுவிளைப்பன சோம்பலும் கொடுமையுமே என்று நான் சொல்வதை நம்பு. ஒருவேளை, உன்னிடத்தில் பெருமை இருக்கலாம். பெருமை, மதசம்பந்தமில்லாதவிடத்து பெருநன்மை பயக்கக்கூடியது, ஒருவேளை நீ "பெருமிதம்" உடையவளாயிருக்கலாம். அநேகமாய் அக்குற்றம் உன்னிடத்திலிருக்கும். இது உன்னைப்புகழ வருபவர்களுக்கு மிகவும் அநுகூலமானது. ஒருவேளை, நீ கொஞ்சம் பொறாமையுடையவளாயிருக்கலாம். உண்மையில் இது மிகவும் நடுக்கத்தக்கதே. என்றாலும் இக்குற்றம் எவர்க்குமுள்ளதே. ஒருவேளை, நீ பிறர் துன்பத்திற் களிப்படையுஞ் சுபாவம் சிறிதுடையவளாயிருக்கலாம். இதை நினைக்க எனக்கு மனவருத்தமாயிருக்கிறது. ஆயின், நான் உன்னைத் தெரிந்திருந்தால், உன்னுடன் பேசிக்கொண்டிருந்து அதிக ஆனந்தம் அடையக்கூடும்.

இவைபோன்ற வேறு குற்றங்கள் உன்னிடம் காணப்படினும் அவற்றாலல்லவளவு கேடில்லை. ஆனால், நீ உபயோகமற்றவளாயும், கடின சித்தமுள்ளவளாயும் இருத்தல் கூடாது. உலகசிருஷ்டி முதல், தக்க இன்ன தகாதனவின்னவென்ற ஆராயும் ஆன்றோர்

யாவரும், அநுபவத்தாலுணர்ந்தும், தமக்குள் மாறுபாடின்றி ஒருங்கே போதிலும் வருமுண்மை யாதாவதுளதாயின், அது கடவுள் சோப்பேரிகளையும் குருரிகளையும் மற்றைபவரெல்லாரையும்விட அதிகமாய் வெறுக்கின்றனென்பதே.

"வெளிச்சமுள்ள பொழுது வேலைசெய்"
"அருளுள்ள பொழுதே பிள்ளைவர்க்குமிரங்கு"

என்னும் ஆண்டவன் ஆணைகளை நோக்குக.

'வெளிச்சமுள்ள பொழுது வேலைசெய்' அதினும் காலைவெளிச்சத்தில். அருமையைச் சிறுவர்க்கு, மூத்தோர் ஒருக்காலும் உரையாதிருப்பது, எனக்குப் போச்சிரியத்தை உண்டுபண்ணுகிறது. அவர்கள் (மூத்தோர்) சமயாசமயங்களில், தங்கள் சென்ற நாட்களை நினைந்து வருந்துகிறார்கள். சிலசமயங்களில் சிறுவர்களை மூடத்தனமாய்க் கண்டிக்கிறார்கள். அதைவிட மூடத்தனமாகச் செல்... கள். இவைகளையெல்லாம்விட அ...வினமாய், அவர்கள் போக்கைக் கெடுத்துத் தடுக்கிறார்கள். ஆனல், ஒருபொழுதாயினும் அவர்களைக் கவனிப்பதுமில்லை, எச்சரிப்பதுமில்லை.

ஆகையால், குழந்தையே! நான் இது உனக்கு இப்பொழுது எச்சரிப்பதை ஞாபகம் வைத்துக்கொள். ஏனெனில், உனது வாழ்க்கை நலமும், வலியும், இம்மைமறுமைப்பருக பரிமாணங்களும், நீ, இப்பொழுது உன் நாட்களைக் கழிக்கும் விதத்தைப் பொறுத்திருப்பன என்பதாம். இந்நாட்களிலேயே நீ கவலையடையவேண்டுமென்பதென் கருத்தல்ல. அங்ஙனமின்றி சதா ஆனந்தமடைவதும் விளையாடுவதுமே சிறுவர் முதற்கடனாகும். ஆயினும் இந்நாட்கள் அதிகம் கவனிக்க வேண்டியவைகளே. (தமிழன்)

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
190870

Self-Culture Journal.

ஸெல்வ்கல்ச்சர் ஜர்னல்.

இம்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகையில் வெளியாகும் விஷயங்களாவன:— ஆத்மாவர்த்தினிக்குரிய இகபர ஞானரகசியங்கள், தேகாரோக்கியம் ஆத்மரஞ்சிதமான ஹிதோபதேசம், ஆத்மயோக மனோவசிய தத்வ சாஸ்திரங்கள், நவீன சாஸ்திர ஆராய்ச்சி, முதலியன. இது யாவருக்கும் உபயோகமானது.

வருஷசந்தா ரூ. 1.] [தனிப்பிரதி அணா. 1.

பத்திராதிபர்:

டாக்டர் K. T. ராமஸ்வாமி, D. Sc., Ph. D.

இந்தியா சாஸ்திர கல்விச்சாலை, கீழநத்தம் போஸ்டு,

திருநெல்வேலி ஜில்லா, தென் இந்தியா.

ஹிப்னடிஸம், மெஸ்மெரிஸம், திடசித்தப்பயிற்சி முதலியன அடங்கிய, ஆத்ம யோக மனோவசிய சாஸ்திர மென்னும்,

வசியசாஸ்திரம்.

அனுபவசித்தி பெற்றது! ... புதியபதிப்பு வெளியாகிவிட்டது!

திருநெல்வேலி ஜில்லா, கீழநத்தம்,

இந்தியா சாஸ்திர கல்விச்சாலை,

பிரஸிடெண்டு,

டாக்டர் K. T. ராமஸ்வாமி, D.Sc., Ph.D,

அவர்கள் எழுதியது.

இப்புஸ்தகத்தில் அடங்கிய விஷயங்கள்.

மனோவசியம், ஞாபகசக்தி அபிவிருத்தி, ஜனவசியம், மிருகவசியம், திடசித்தப்பயிற்சி, மந்திரவாதம், ஹிப்னடிஸம், சித்திவேலைகள், பிராமண ஆராய்ச்சி முறைகள், யோக முறைகள், ஞானதிருஷ்டி, தூரசிரவண முறைகள், சூக்ஷ்மலோக தரிசனம், தேவதைகள் வசியம் முதலிய அரிய பெரிய ஞானரகசியங்கள் அநேகம் அடங்கியுள்ளன. அருமையான அனுபவ முறைகள்! தற்புகழ்ச்சியன்று!! அபூர்வ சித்திகள்!!!

இப்புஸ்தகத்தைக்கைபற்றிய 3 மாதத்திற்குள் ஜெயமடையலாம்.

இதில் ஏதேனும் சந்தேகங்களுண்டாயின் மேற்குறித்த கல்விச்சாலையில் மெம்பராகச்சேர்ந்து ஏற்பட்டசந்தாத்தொகையைச் செலுத்தி இந்நூலாசிரியரவர்களிடம் நேரிலாவது தபால்மூலமாவது நன்கு தெரிந்துகொள்ளலாம்.

☞ இவ்விதபுஸ்தகங்களநேகர் வெளியிட்டிருப்பதால் இதில் குறித்த நூலாசிரியருடைய பெயருள்ள புஸ்தகமாக கவனித்துவாங்கவும்.

இதனையாவரும் படித்து எளிதில் பொருளுணர்ந்து ஆனந்தத்தை யனுபவிக்கும்பொருட்டு எளிய செந்தமிழ் நடையில் எழுதி அச்சிட்டு சொற்பவிலை ஏற்படுத்தியிருக்கிறோம். (முதலில் ரூ. 5 வீதம்விற்றது) 3 பாகங்களடங்கிய செட் 1க்கு ரூ. 1-4-0 மட்டும்.

இந்தியா சாஸ்திர கல்விச்சாலை,

கீழநத்தம் போஸ்டு,

திருநெல்வேலி ஜில்லா, தென் இந்தியா.